இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,367, APRIL 22, 1910.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Proclamation of By-laws under the Rural Schools Ordinance framed by the District School Committee of Chilaw.]

பெரிய பிரித்தானியும் அயர்லந்தும் ஆகிய ஐக்கிய இராச்சியத்திற்கும், கடல்களுக்கு அப்புறத்துள்ள பிரித்தின் அதிபதிய நாடுகளுக்கும், இராஜாவும் சமயபரிபாலகரும் ஆகிய மகத்துவ நாயக ஏழாம் எட்வட் அவர்களின் நாமத்தினாலே:

மகா மகிமைபொருந்திய சென்ற் மைக்கெல் அன்ட் சென்ற் ஜோர்ஜ் வரிசையின் நயிற் பட்டவர்த்தனரும்,
இலங்கைத்தீவுக்கும் அதைச்சார்ந்த நாடுகளுக்கும் தேசாதிபதியும் சேனாதிபதியும்
ஆகிய சேர் ஹென்றி எட்வட் மெக்கல்லம் அவர்கள் செய்யும்

## விளம்பரம்.

ஹென்றி மெக்கல்லம்,

ஊர்ப்பிரிவுப் பாடசாலைச் சங்கத்தவர்கள், 1907 ம் ஆண்டின் (8 ம்) இலக்க நாட்டுப்புறத்துப் பாடசாலைச் சட்டத்தின் (19 ம்) பிரிவின்படி இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் வடமேல் மாகாணத்து சலாபத்துப் பாடசாலை ஊர்ப்பிரிவுக்காக உண்டாக்கிக்கொண்டார்கள். ஆதலினால் இலங்கைத் தேசாதிபதியாகிய நாம் மேற்படிச் சட்டத்தின் 20 ம பிரிவின் (2 ம்) கீழ்ப் பிரிவினால் நம்மிடத்து வைத்த அதிகாரத்தைச் செலுத்தவும், அதிகார மந்திரசபையாரது ஆலோசனைகொண்டும் மேற்படி அட்டவணையில் வெளிப்படுத்திய உபவிதிகளை இத்தால் பலப்படுத்துகிறோம் என்றும், இந்தத் தேதி முதலாக அவ்விதிகள் வழங்கப்படவேண்டும் என இத்தால் விளம்பரம்பண்ணி வெளிப்படுத்துகிறோம்.

எங்களாண்டவராகிய கர்த்தருடைய 1910 ம் ஆண்டு எப்றல் (சித்திரை)மீ 19 ந் தேதி இலங்கைத்தீவின் நுவரெலியாவில் கொடுக்கப்பட்டது.

மகோத்தமராகியவர்களினது கட்டளைப்படி,
ஹியூ கிளிவ்வோட், இராசாங்க லிகிதர்.

தேவன் அரசரைக் காப்பாராக.

---

## உபவிதிகள்.

1907 ம் ஆண்டின் கிராமப் பள்ளிக்கூடச் சட்டச்சட்டத்தின் 19 ம் 20 ம் பிரிவுக்கமைய சலாபம் பள்ளிக்கூடப் பிரிவின சங்கத்தாரால் பள்ளிக்கூடக் குறிச்சிக்கென ஏற்படுத்தப்பட்ட உபவிதிகள்:—

1. இந்த உபவிதிகளில் "பையன்," "பெண்பிள்ளை," "பிள்ளை" என்னும் சொற்கள் சலாபப் பள்ளிக்கூடப் பிரிவுக்குள் வசிக்கும் ஒரு பையனை, ஒரு பெண்பிள்ளையை, அல்லது ஒரு பிள்ளையைக் கருதுகின்றது.

"பெற்றார்" என்னும் சொல்லானது பாரபரிப்பாலனையும், பிள்ளையை உள்ளபடி தமது காவற்பொறுப்பில் வைத்திருக்கும் எவரையும் உட்படுத்தும்.

"சட்டம" என்னும் சொல் தற்போதைக்காக அதிகார மந்திராலோசனை சபையின் மாட்சிமைதங்கிய தசாதிபதியவர்களால் அனுமதிசெய்யப்பட்ட உதவி நன்கொடைபெறும் சட்டத்தைக் கருதுகின்றது.

"வரவு" என்னுஞ்சொல் சட்டத்தால் விதிக்கப்பட்ட பிரகாரம் ஒரு வரவிடாயில் பதித்த முழு வரவைக்கொண்டதாய் சட்டத்தால் கூறப்பட்ட காலத்தின் வரவைக்கருதுகின்றது.

"பிரிவுச்சங்கம்" என்னுஞ் சொல் சலாபப் பள்ளிக்கூடப் பிரிவுக்கான பள்ளிக்கூடப்பிரிவுச் சங்கத்தைக் கருதுகின்றது.

"பள்ளிக்கூடம்" என்னுஞ் சொல் இதனோடிணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் விபரித்து இருக்கும் ஒரு பள்ளிக்கூடத்தைக் கருதுகின்றது.

"ஒரு பிள்ளையின கல்விப்பயிற்சிக்கு போதியதும் பொருத்தமுமான ஒழுங்குகள்" நியாயமான மன்னிப்புகள்" என்னுஞ்சொற்கள் 1907 ம் ஆண்டின் கிராமப் பள்ளிக்கூடக் கட்டளைச்சட்டத்தின் 20 ம் பிரிவிலுள்ள உட்பிரிவின் (1) (b) யில் காட்டியிருக்கும் கருத்தைக்கொள்வன.

"வித்தியாதரிசி" என்னுஞ் சொல் மாட்சிமைதங்கிய தேசாதிபதியவர்களால நியமனம்பண்ணப்பட்ட ஒரு வித்தியாதரிசியைக் கருதுகின்றது.

2. ஆறு வயதுக்குக் குறையாததும், பன்னிரண்டு வயதுக்கு கூடாததுமான ஒவ்வொரு பையனினதும், மகமத்வேதத்திற்குச்சேர்ந்த பெண்பிள்ளைகள் தவிர, ஆறு வயதுக்குக் குறையாததும் பன்னிரண்டு வயதுக்கு கூடாததுமான ஒவ்வொரு பெண்பிள்ளைகளினதும் தாய் தந்தையர் அப்பிள்ளைகளை அந்தப் பள்ளிக்

கூடத்திற்காவது அனுப்பக் கடமையுள்ளவர்களாயிருக்கின்றார்கள். ஆனாலும் அப்பிள்ளைகளின் கல்விக்காக வேறு விதமாய் ஏதும் ஒழுங்குபண்ணியிருக்கால், அல்லது அப்பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக் கனுப்ப யாதாமொரு தடையிருந்தால், தாய்தகப்பன்மார் இக்கடமைக் குள்ப்படார்கள்.

3. ஒவ்வொரு பையனினதும் அல்லது பெண்பிள்ளையினதும் பள்ளிக்கூடத்திற் படிக்கவேண்டிய நேரம் அப்படிக்கொத்த வயதான பிள்ளைகளின் கல்விப்பயிற்சிக்காகச் செலுத்தப்படும் முழு நேரமாகவே யிருக்கும்.

4. ஆயின் எப்போதும் இந்த உபவிதிகளில் யாதேனும் :—

(a) 1907 ம் ஆண்டின் கிராமப்பள்ளிக்கூடச்சட்டத்தின 21 ம் பிரிவிலுள்ள உட்பிரிவின் (d) ஆல் ஒழுங்குப் பந்தியிருக்கிறபடி சமயத்துக்குரிய பாடங்கள் கொடுக்கப்படும் நேரத்தில் பிள்ளைகள் இராதிருத்தலைத் தடுக்காது.

(b) பிள்ளையினுடைய பெற்றோர் சேர்ந்த சமயக் கூட்டத்தால் சமய அனுசரிப்புக்கென்று பிறம்பாய் நியமித்திருக்கும் எந்த நாளிலும் அப்பிள்ளை பள்ளிக்கூடத்திற்கு தடையின்றி வந்திருக்க இத்தால் அவசியப்படுத்த மாட்டோம்.

5. ஆயினும் எப்போதும் 10 ம் 12 ம் வயசுக்கிடையிலுள்ள ஒரு பிள்ளை கிராமச்சங்கத்தின் தலைவரின் திருப்திக்கு சனமைாய்ப் பிரகேசிக்கப்பட்டு அவன் அல்லது அவள் தற்போதுக்கான சட்டத்தால் விதிக்கப்பட்ட 4 ம் தரத்தில் வாசகத்திலும், வரியிலும், கணக்கிலும், தேற்றிபெற்றதாக ஒரு வித்தியாதரிசியிடமிருந்து செட்டிபிக்கேட் கைக்கொண்டிருந்தால் பள்ளிக்கூடத்திற்குப் போகத் தேவையிராது.

6. இந்த உபவிதிகளை அல்லது இதில் எதனையேனும் அனுசரியாத அல்லது அசட்டைபண்ணும், அல்லது மீறும் ஒவ்வொரு பெற்றோரும் குற்றச்சாட்டுக்குள்ளாகுல், ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் முதலாம்விசை ஐந்து ரூபாவுக்கு மேற்படாத தண்டனைக்குள்ளாவார். இரண்டாம் அல்லது அதன்பிறகு நடக்கிற ஒவ்வொரு குற்றத்திற்கும் பத்து ரூபாவுக்கு மேற்படாத தண்டனைக்குள்ளாவார்.

குறிப்பு.—பின்வரும் கிராமப் பள்ளிக்கூடக் கட்டளைச்சட்டத்தின் பகுதிகள் இவ்வுபவிதிகளின் 1 ம் 4 ம் பிரிவில் குறிக்கப்பட்டிருக்கின்றவை :—

(20) ம் பிரிவின் உட்பிரிவிலுள்ள (1) (b) ஒரு தந்தை உதவி நன்கொடைபெறுதற்காய் பிரசித்த வித்தியாகர்த்தாவால் பதியப்பட்ட ஒரு பள்ளிக்கூடத்தில் அல்லது உதவி நன்கொடைக்காக விண்ணப்பப்பத்திரம் ஆலோசனையிலிருக்கும் ஒரு பள்ளிக்கூடத்தில், அல்லது போதியதும் பொருத்தமுமான கல்விப் பயிற்சி கொடுக்க பிரசித்த வித்தியாகர்த்தாவால் அனுமதிக்கப்பட்ட ஒரு பள்ளிக்கூடத்தில் தன்பிள்ளை சரியாய் வரவாகிறதென்று அத்தாட்சிப்படுத்தினால், அல்லது பிரசித்த வித்தியாகர்த்தர் போதியதும் பொருத்தமுமானதென்று அங்கீகாரம்பண்ணக்கூடிய வேறு ஒழுங்குகளை தன்பிள்ளையின் கல்விப்பயிற்சிக்குச் செய்துவைத்திருக்கிறதாக அத்தாட்சிப்பண்ணினால், அல்லது தன்பிள்ளை பள்ளிக்கூடத்துக்கு கட்டாயமாக போகிறதில் இருந்து விலக்கப்பட வேண்டுமென்று பிரசித்த வித்தியாகர்த்தர் அங்கீகாரம்பண்ணிய அதிகாரபத்திரமொன்றைக் காட்டினால், தன்பிள்ளையின கல்விப் பயிற்சிக்காகப் போதியதும் பொருத்தமுமான ஒழுங்குபண்ணியிருக்கிறதாக மதிக்கப்படுவான். ஆயின், அப்படிப்பட்ட பிள்ளையைப் பள்ளிக்கூடத்திற்குப் போகப்பண்ணுமலிருக்கிறதற்கான நியாயமான சாட்டு உண்டென்று கோட்டாரின் திருப்திக்கு அத்தாட்சிபண்ணினால், அப்படிப்பட்ட பள்ளிக்கூடத்துக்குத் தன்பிள்ளையைப் போகப்பண்ணுமலிருக்கிறதற்காக எந்தப் பெற்றோரும் குற்றவாளியாக்கப்படமாட்டான். ஒரு தந்தை தன்பிள்ளை வியாதியால் அல்லது தவிர்க்கொணாத காரணத்தால் பள்ளிக்கூடத்துக்குப் போகிறதில் நின்று தடுக்கப்பட்டதாக அத்தாட்சிப்படுத்தினால் அவன் பிள்ளையைப் பள்ளிக்கூடத்துக்குப் போகப்பண்ணுதிருக்க நியாயமான சாட்டுள்ளவனாக மதிக்கப்படுவான்.

உட்பிரிவு 21 :—

(a) சமயத்துக்குரிய படிப்புகளை பள்ளிக்கூட நேர அட்டவணையில் காட்டிய நேரங்களில் மாத்திரம் கொடுக்கப்படுகிறதென்றும் ;

(b) சமயத்துக்குரிய படிப்புகள் பள்ளிக்கூடச் சமயத்துக்குச்சேர்ந்த மாணுக்கரைத்தவிர மற்றச் சமயத்தாருக்கு பெற்றோர் தடுக்கில் கொடுக்கப்படுகிறதில்லை யென்றும் ;

(c) சமயப்படிப்புக்குச்சேராத மாணுக்கர் சமயப்படிப்புக்கென நியமித்திருக்கும் நேரத்தில் வேறு படிப்புகளில் தைவிட்டிருக்கிறார்களென்றும் ;

(d) சமயத்துக்குரிய படிப்புகள் கொடுக்கும் அறையில் தங்கள் பிள்ளைகள் இருக்கிறதைப்பற்றி பெற்றோர் தடைசெய்தால், அப்படியான படிப்புகள் கொடுக்கும் நேரத்தில் அப்படிப்பட்ட பிள்ளைகள் பள்ளிக்கூடக் கட்டிடத்தின் வேறு பகுதியில் படிக்கவிடப்பட்டிருக்கிறார்களோ அல்லது அப்படியான நேரத்தில் அவர்கள் சமுகமாயிருப்பது மன்னிக்கப்பட்டிருக்கிறதோ வென்றும ;

(e) இந்தப் பிரிவின் ஒரு பிரதி இங்கிலீசு, சிங்களம், தமிழ் பாஷைகளில் பள்ளிக்கூடத்தில் விளக்கமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதோ வென்றும், பிரிவுச் சங்கத்தார் திருப்திபட்டாலொழிய, சமயத்துக்குரிய படிப்புகள் கொடுக்கும் யாதாமொரு பள்ளிக்கூடமும் பிரசித்த சுதேச பள்ளிக்கூடமாக நினைக்கப்பட மாட்டாது.

மேற்கூறிய உபவிதிகள் சலாபப் பள்ளிக்கூடப் பிரிவுக்காக பள்ளிக்கூடம் பிரிவின் சங்கத்தாரால் 1909 ம் ஆண்டு மாசிமாதம் 22 ம் தேதி கூடிய கூட்டத்தில் உண்டாக்கப்பட்டது.

ஏ. சீ. ஆன்கட்,
சங்கத்தலைவர்.

---

அட்டவணை.

பிட்டிகல்கோறளை வடக்கு.

கல்மூறுவை பாடசாலை.
கருக்குவை புத்தசமயப் பாடசாலை.
அம்பக்கத்தவில் ரோமைக்கத்தோலிக்கப் பாடசாலை.
திகதக்கடை டை. டை.
மெதகமப்பாடசாலை மத்தியம பிட்டிகல் கோறளையில்.
மொரவெல ரோமைக்கத்தோலிக்க பாடசாலை.
டை. இங்கிலாந்துசமய டை.
மாதன்குளம் டை. டை.
பன்பல ரோமைக்கத்தோலிக்க தமிழ் டை.

புத்தசமய பாடசாலை யொன்று கட்டுகிறார்கள்.
பண்டாரவத்தை ரோமைக்கத்தோலிக்க பாடசாலை.
சலாபம் டை. டை.
கோட்டப்பிட்டி டை. டை.
கருக்குப்பனை டை. டை.
இராசக்கதனுவை டை. டை.
வத்தனுஓயை டை. டை.
கூட்டப்பு கவந்னமேந்துப் பாடசாலை.
மய்யாவை டை. டை.
தல்கஹப்பிற்றிப் பாடசாலை குருநாகல் டிஸ்திறிக்கில்.

மத்தியம பிட்டிகள் கோறளை,

தெமட்டபிட்டி ரோமைக்கத்தோலிக்க கலவன் பாடசாலை.
மாவில டிை டிை
மாவில புத்த சமயப் பாடசாலை.
கவர்ன்மேந்து சுயபாஷைப் பாடசாலை.
மொறக்கலை ரோமைக்கத்தோலிக்கப் பாடசாலை.
கொஸ்வத்தை புத்த சமயப் பாடசாலை (றெஜிஸ்டர்பண்ணியில்லை).
மாருவில புத்தசமய கலவன் பாடசாலை.
நாத்தாண்டி கவர்ன்மேந்து ஆண் பாடசாலை.
டிை பெண் டிை
நாத்தாண்டி ரோமைக்கத்தோலிக்க டிை
மாருவில டிை ஆண் பாடசாலை
டிை பெண் டிை
டிை கலவன் டிை
மட்டக்கொட்டு டிை ஆண் டிை
டிை பெண் டிை
ஹந்திளி சல்வேசன் ஆர்மி பாடசாலை.
மட்டக்கொட்டுப்பாடு ரோமைக்கத்தோலிக்க டிை
தொடுவாய் டிை கலவன் டிை
இஹளவளாப்பிட்டி கவர்ன்மேந்துப் பாடசாலை.
டிை வெஸ்லியன் சமய டிை
தல்கச்சாகாறை ரோமைகத்தோலிக்க டிை
ஹெவளை வெஸ்லியன் சமயக் கலவன் பாடசாலை (றெஜிஸ்டர்பண்ணயிலில்லை.
இஹளமடுவாவெவ புத்த சமயப் பாடசாலை.
மாதம்பை ரோமைக் கத்தோலிக்க டிை
டிை பப்திஸ்சமயப் பாடசாலை.
டிை புத்தசமயப் பாடசாலை.
குடாவிருப்பு கவர்ன்மேந்து பாடசாலை.
பெந்தகம டிை டிை

பித்திகள் கோறளை தெற்கு.

இக்வலை கவர்ன்மேந்து பெண் பாடசாலை.
வெக்கடை கவர்ன்மேந்து ஆண் பாடசாலை.
வஜ்ஜம்பளை புத்தசமய கலவன் டிை
பொத்துவட்டவளை கவர்ன்மேந்து டிை
ஹான்தண்வெளை ரோமைக்கத்தோலிக்கப் பாடசாலை.
ஹட்டவில, டிை
கிரிமெட்டியாளை கவர்ன்மேந்து பெண் பாடசாலை.
டிை டிை ஆண் டிை
ஞுணுவில கிரிமெட்டியாளை ரோமைக்கத்தோலிக்க கலவன் பாடசாலை.
எட்டியாவலை கவர்ன்மேந்து ஆண் பாடசாலை.
டிை டிை பெண் டிை
தும்மளக்கொட்டு ரோமைக்கத்தோலிக்க கலவன் பாடசாலை.
சேனாவத்தை ரோமைக்கத்தோலிக்க பெண் பாடசாலை.
டிை டிை ஆண் டிை
தும்மளக்கொட்டு ரோமைக்கத்தோலிக்க கலவன் பாடசாலை.
வண்டிருப்பு ரோமைக்கத்தோலிக்க கலவன் பாடசாலை.
கோஸுவில் ரோமைக்கத்தோலிக்க ஆண் டிை
கொட்டல்ல டிை டிை
தம்பருவில் ரோமைக்கத்தோலிக்க கலவன் பாடசாலை.
கம்மல் டிை டிை
தஞ்சண்டான்கரை ரோமைக்கத்தோலிக்க டிை
நயினமடம் ரோமைக்கத்தோலிக்க கலவன் டிை
டிை டிை ஆண் டிை
டிை டிை பெண் டிை
பொறம்வஷ்ஷை டிை ஆண் டிை
டிை டிை பெண் டிை
தும்மளதெனி டிை கலவன் டிை
வென்னப்புவை டிை ஆண் டிை
டிை டிை பெண் டிை
உல்வெட்டியா டிை கலவன் டிை
கட்டுநேரி டிை ஆண் டிை
டிை டிை பெண் டிை

## LAND SALES.

### காணி விற்பனவுகள்.

No. 593, N. P.—1910 ம் ஆண்டு ஆனிமாதம் 14 ந் தேதி, செவ்வாய்க்கிழமை, காலமே 11 மணியளவில், தன் ஆபீசில, வடமாகாணத்து கவர்ன்மேந்து ஏசென்றவர்களால் இனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் விற்கப்படும் அல்லது உரித்துமுடிவுசெய்யப்படும். 13 காணித்துண்டுகள், வடமாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் வடமருட்சி மேற்குப் பகுதியிலிருக்கின்றது.

பிளான் இல. 3,460. உரித்தாளி—அரசாட்சி.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | காணிப் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | அ. | பெ. | ஏக்கரொன்றின் பார்வைப்பு விலை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 12874 | பொலிகண்டி | கருத்தத்தெனி | ஒரு பனையகட்டிடம் இருக்கிறது | 0 | 0 | 27·50 | 15 |
| 12875 | டிை | டிை | மடம் ஒன்றிருக்கிறது | 0 | 0 | 28 | 250 |
| 12876 | டிை | டிை | தரிசு | 0 | 1 | 20·50 | 15 |
| 12877 | டிை | சத்தன்பொக்கனை | தரிசு | 0 | 0 | 22·50 | 15 |
| 12878 | டிை | டிை | அந்தக்கண்டத்தில் ஒரு கூவமரமுண்டு | 0 | 0 | 23·50 | 25 |
| 12879 | டிை | டிை | டிை | 0 | 1 | 2·50 | 25 |
| 12880 | வல்வெட்டித்துறை | சவக்காலையடிநிலம் | தரிசு | 0 | 1 | 38 | 20 |
| 12881 | டிை | டிை | தரிசு | 0 | 3 | 20 | 50 |
| 12882 | டிை | திருப்பன் தாள்வு | தரிசு | 0 | 0 | 11 | 18 |
| | | | உரித்தாளி—சே. சிவப்பிரகாசம், | | | | |
| 12883 | டிை | டிை | தென்னம்பிள்ளை வைக்கப்பட்ட | 0 | 0 | 8 | 150 |
| | | | உரித்தாளி—அரசாட்சி. | | | | |
| 12884 | டிை | டிை | தரிசு | 0 | 0 | 7 | 15 |
| 12885 | டிை | டிை | தரிசு | 0 | 0 | 35·50 | 15 |
| 12886 | டிை | டிை | தரிசு | 0 | 0 | 7 | 15 |

இக்காணிகளைப்பற்றிய வேறே காரியங்கள் அறியவேணுமாகில் கவர்ன்மேந்து ஏசென்றிடத்திலும் படங்களைப்பற்றி அளவுகத்தோரின் பெரியதுரையவர்களிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிரத்தார் ஆபீசில்,
கொழும்பு, 1910 ம் ஸ்ரீ ஏப்றல் (சித்திரை)மீ 14 ந் உ.

மகோத்தமரவர்களின் கட்டளைப்படி,
ஹியு கிளிஃவோட், இராசாங்க விதேர்.

No. 1,950, N.W. P.—1910 ம் ஆண்டு ஆனிமாதம் 13 ந் திகதி, திங்கட்கிழமை, பகல் ஒருமணியளவில், தன் ஆபீசில், வடமேல் மாகாணத்து புத்தளம் உதவி கவர்ன்மேந்து ஏசென்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்க அல்லது முடிவுகட்டப்படும். 36 காணித்துண்டுகள், வடமேல் மாகாணத்து புத்தளம் டிஸ்திறிக்கின் புத்தளப்பத்து கல்பிட்டி பகுதிகளிலிருக்கின்றது.

பிளான் இல. 3,749. புத்தளம் பத்து. குறிச்சி—முறந்தன்வெளி. உரிததாளி—முடி.

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | அ. | பெ. | ஏக்கருக்கு மதிப்பு ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 16338 | முறந்தன்வெளி காடு | புத்தளம் ஸலாலெவ்வெ | காடு | 1 | 0 | 22 | 20 | 0 |
| 16339 | டிை | டிை | தென்னந்தோட்டம் | 0 | 1 | 20 | 50 | 0 |
| 16340* | — | — | றோட்டுக்கு சேமித்திருக்கும் நிலம் | 0 | 0 | 8 | — | |

* விற்பனவுக்கல்ல.

பிளான் இல. 3,714. குறிச்சி—துனைமதனி. உரித்தாளி—ப. வ. ச. செட்டி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர் | விவரம். | விசாலம். ஏ. | அ. | பெ. | மதிப்பு ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 16270 | துனைமருவி காணி | முடி | தென்னந்தோட்டம் | 2 | 0 | 5 | 642 | 0‡ |
| | பிளான் இல. 3,649. குஜகுமாரவன்னிபற்று. குறிச்சி—புனைவித்திய. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 16091 | வீஹேனகலே | ஹொகஹாமிவிதானே | மூக்களானே | 2 | 0 | 38 | 30 | 0 |
| 16092 | — | — | மூனதமூக்கு சேமித்திருக்கும் நிலம் | 0 | 1 | 3 | —* | |
| | பிளான் இல. 3,771. குறிச்சி—மைலாவ. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 16455 | புனவித்தியகலே | பின்ஹாமிவன்றடிவிடனருன | பழையசேனை | 5 | 1 | 6 | 20 | 0 |
| 16456 | ஷை | ஷை | மூக்களானே | 0 | 0 | 16 | 22 | 50 |
| | பிளான் இல. 3,657. அக்கறைப்பற்று தெற்கு. குறிச்சி—கண்டதொடுவா. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 16106 | கண்டதொடுவாகாணி | முன்தன் | காடு | 58 | 1 | 0 | 105 | 0† |
| | பிளான் இல. 1,667. குறிச்சி—முக்குவதொடுவா, கண்டதொடுவா. உரித்தாளி—போத்தளகே பேதுருபறுத்து. | | | | | | | |
| T 704 | மற்றிஜுங்கவத்த | கன்தன் | காடு | 2 | 3 | 33 | 50 | 0 |
| U 704 | முக்குவதொடுவாவத்த | ஷை | காடு | 1 | 0 | 10 | 50 | 0 |
| | உரித்தாளி—முடி. | | | | | | | |
| V 704 | ஷை | ஷை | காடு | 2 | 2 | 23 | 50 | 0 |
| | உரித்தாளி—கே. பாவுலுபறுத்து. | | | | | | | |
| X 704 | ஷை | கன்தன் | தென்னந்தோட்டம் | 0 | 2 | 12 | 55 | 0 |
| | உரித்தாளி—பி. செருயோனுபறுத்து. | | | | | | | |
| Z 704 | கோகாவத்த | கன்தன் | தென்னந்தோட்டம் | 1 | 3 | 1 | 100 | 0 |
| | உரித்தாளி—பி. கபிரியேல் சில்வா. | | | | | | | |
| D 705 | மகதங்காவத்த | கன்தன் | தென்னந்தோட்டம் | 1 | 3 | 28 | 175 | 0 |
| | உரித்தாளி—முடி. | | | | | | | |
| E 705 | முக்குவதொடுவாவத்த | ஷை | வெளிகாணி | 0 | 0 | 27 | 15 | 0 |
| I 705 | ஷை | ஷை | காடு | 3 | 0 | 16 | 30 | 0 |
| | உரித்தாளி—தொபியஸ் பறுத்துவும் மற்றவர்களும். | | | | | | | |
| J 705 | ஷை | கன்தன் | தென்னந்தோட்டம் | 3 | 3 | 24 | 500 | 0 |
| | உரித்தாளி—போத்தளகே பேதுரு பறுத்து. | | | | | | | |
| L 705 | மற்றிஜுகேவத்த | கன்தன் | தென்னந்தோட்டம் | 0 | 1 | 34 | 200 | 0 |
| | உரித்தாளி—எம். சாம் பறுத்து. | | | | | | | |
| Q 705 | பள்ளிவாசல்வத்த | கன்தன் | தென்னந்தோட்டம் | 0 | 1 | 29 | 30 | 0 |
| | உரித்தாளி—சவரியல் பறுத்து பீலெபிசர். | | | | | | | |
| R 705 | கண்டதொடுவாவத்த | கன்தன் | தென்னந்தோட்டம் | 1 | 0 | 26 | 500 | 0 |
| | உரித்தாளி—பேதுரு பறுத்து. | | | | | | | |
| U 705 | பள்ளிவாசல்தோட்டம் | கன்தன் | பழைய புகையிலைத்தோட்டம் | 0 | 1 | 23 | 25 | 0 |
| | பிளான் இல. 3,761. குறிச்சி—தலுவ. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 16374 | மய்குட்டல்காடு | மரியன்பிள்ளை | காடு | 3 | 0 | 30 | 30 | 0 |
| 16375 | — | — | ரோட்டுக்குச் சேமித்திருக்கும் நிலம் | 0 | 2 | 18 | —* | |
| 16376 | மய்குடல்காடு | மரியன்பிள்ளை | குளம் | 0 | 1 | 2 | 15 | 0 |
| 16377 | ஷை | ஷை | ஷை | 0 | 0 | 6 | 15 | 0 |
| | பிளான் இல. 3,592. குறிச்சி—நாவற்காடு. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 15936 | பனங்குடில்காடு | அந்தனியும் மற்றவரும் | காடு | 2 | 1 | 31 | 30 | 0 |
| | பிளான் இல. 3,708. குறிச்சி—நாவற்காடு. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 16232 | தாளையடிகாணி | சிமன்பிள்ளை | காடு | 7 | 2 | 19 | 25 | 0 |
| | பிளான் இல. 3,755. குறிச்சி—நாவற்காடு. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 16358 | தாளையடிகாடு | மரியானு பேதுரு | காடு | 5 | 2 | 0 | 30 | 0 |
| 16359 | — | — | ரோட்டுக்குச் சேமித்திருக்கும் நிலம் | 0 | 0 | 24 | —* | |
| | பிளான் இல. 3,757. குறிச்சி—நாவற்காடு. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 16362 | பனிஞ்சியடிகுடல்காடு | அந்தோனிபிள்ளை | காடு | 2 | 2 | 23 | 25 | 0 |
| 16363 | — | — | ரோட்டுக்குச் சேமித்திருக்கும் நிலம் | 0 | 0 | 24 | —* | |
| 16364 | பனிஞ்சியடிகுடல்காடு | அந்தோனிபிள்ளை | தென்னஞ்செய்கை | 0 | 0 | 35 | 35 | 0 |
| 16365 | சவிரியன்குடல்காடு | மரியன்பிள்ளை | காடு | 0 | 3 | 6 | 25 | 0 |
| | பிளான் இல. 3,758. அக்கரைப்பற்று வடக்கு. குறிச்சி—நாக்கவி. உரித்தாளி—முடி. | | | | | | | |
| 16366 | சந்திக்காணி | அந்தோனிபிள்ளை சவரி | காடு | 1 | 3 | 15 | 25 | 0 |
| 16367 | — | — | ரோட்டுக்குச் சேமித்திருக்கும் நிலம் | 0 | 0 | 28 | —* | |

* விற்பனவுக்கல்ல. † இத்துண்டு புத்தளஞ்-சிலாப ரோட்டில் 10 ம் கட்டையால் பிரிந்துபோகும் கண்டத்தொடுவா ரோட்டுச் சமீபத்திலிருக்கின்றன. ‡ முழுத்தொகை.

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விபரங்களை புத்தளம் உதவி ஏசென்றுத்துரையிடத்திலும், அவைகளின் பிளான்களை சருவையர் ஜெனரல் துரையிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிஸ், கொழும்பில், 1910 ம் ஆண்டு ஏப்றல் (சித்திரை)மீ 14 ந் உ.

மேன்மைதங்கிய கவர்னர் அவர்களின் கட்டளைப்படி, ஹியூ க்ளிப்வோட், இராசாங்க லிகிதர்.

## LAND ACQUISITION NOTICES.

அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Maminiange, Kurunegala District.]

1876 ம் ஆண்டு 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஓர் பள்ளிக்கூடத்துக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்வரச் சொல்லப்படும் காணியை, அக்தாவது :—

பிரதமபடத்து இல. 3,806. குறிச்சி—மாமினியங்கே.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | அ. | பெ. |
|---|---|---|---|---|---|---|
| A | மாமினியங்கேயகலதுலப்பொத்தஹேன | வெட்டப்பட்ட சேனை | தி. பி. முன்னகுலமவும் மறுபேரும் | 2 | 2 | 2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டுக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் பற்பாங்களின் பிரகாரம் மந்திராலோசனைச்சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்

குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ௵ ஜூனிமீ 6 ௳ தேதியிலன்று 1 மணிக்கு குருநாகலில் என்முன்பாக வெளிப்பட்டுத் தந்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாகல் கச்சேரி,
1910 ம் ௵ சித்திரைமீ 4 ௳.

ஜீ. எஸ். செக்ஸ்தன்,
வடமேல் மாகாண அரசாட்சி ஏசண்டு

---

[Udugama, Galle District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் உடுகாமத்து ஆண்பிள்ளை பள்ளிக்கூடத்தை விசாலமாக்கும்பொருட்டு என்றும் பகிரங்கத்தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை அக்தாவது:—

பிரதம படத்து இல. 528. குறிச்சி—உடுகாமம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. அ. பெ. |
| --- | --- | --- | --- | --- |
| 81a | இறன்கொடவத்தை | தென்னந்தோட்டம் | அதரோராளகேகே தொன் அந்திரிஸ் த சில்வாவும் இன்னுஞ் சிலர் | 0 0 37 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ௵ ஏப்றல்மாசம் 29 ௳ தேதியிலன்று 9 மணிக்கு உடுகாமத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தந்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1910 ம் ௵ ஏப்றல்மீ 12 ௳.

டபிள்யு. ஈ. தோர்ப்,
அரசாட்சி ஏஜண்டு

---

[Telikade, Galle District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தெலிக்கடையில் ஆண்பிள்ளை பள்ளிக்கூடத்துக்காக என்றும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அக்தாவது:—

பிரதமபடத்து இல. 8,885. குறிச்சி—தெலிக்கடை.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. அ. பெ. |
| --- | --- | --- | --- | --- |
| R 606 | மகாவத்தை அல்லது நாக்கேவிலேவத்தை | அரசாங்க ஆண்பிள்ளை பள்ளிக்கூடம், பிலாமரம் 1, சித்துள் மரம் 6, ஆசனிமரம் 1, கொறகா 1, இன்னும் சிலதுகள் | வில்லியம் விஜேசேகர ஜயவர்தன, பீ. எ. செனவிரத்ன இன்னும் சிலர் | 0 2 0·25 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ௵ ஏப்றல்மீ 30 ௳ தேதியிலன்று காலமே 9 மணிக்கு பத்தேகமத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தந்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகைகளையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1910 ம் ௵ ஏப்றல்மீ 12 ௳.

டபிள்யு. ஈ. தோர்ப்,
அரசாட்சி ஏசண்டு.

---

[Telikade, Galle District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தெலிக்கடை பெண்பிள்ளை பள்ளிக்கூடத்தை விசாலப்படுத்தற்காக என்றும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அக்தாவது:—

பிரதமபடத்து இல. 8,886. குறிச்சி—தெலிக்கடை. விவரம்—பெண்பிள்ளை பள்ளிக்கூடமிருந்தவிடம்.

| துண்டு. | காணியினது பெயர். | உரித்தாளியின பெயர். | விசாலம். ஏ. அ. பெ. |
| --- | --- | --- | --- |
| S 606 | கித்தகேவத்தை அல்லது நியகடித்தவத்தை | தெலிக்கடைபள்ளியெருகே செத்திதிக்கும் இன்னும் சிலரும் | 0 1 9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1910 ம் ௵ ஏப்றல்மாசம் 30 ௳ திகதியிலன்று 9 மணிக்கு பத்தேகாமத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தந்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1910 ம் ௵ ஏப்றல்மீ 12 ௳.

டபிள்யு. ஈ. தோர்ப்,
அரசாட்சி ஏஜண்டு.

---

[Mapalagama, Galle District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அரசாங்க பெண்பிள்ளைப் பள்ளிக்கூடமொன்று கட்டுகிறதற்காக என்றும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அக்தாவது:—

பிரதமபடத்து இல. 526. குறிச்சி—மாபலகம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. அ. பெ. |
| --- | --- | --- | --- | --- |
| 796a | கோவிலகொடவத்தை | தோட்டம் | சார்ள்ஸ் சீ. எஸ். குணவார்தனவும் இன்னும் சிலரும் | 0 1 38 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் எற்பாடுகளின் பிரகாரம மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ௵ எப்றெல்மாதம் 29 ந் திகதியிலன்று காலமே 9 மணிக்கு உடுகோமத் தாணயத்தில் என்முன்பாக வெளிப்படுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1910 ம் ௵ எப்றலிய 12 ந் உ.

டபிள்யு. ஈ. தோர்ப்,
அரசாட்சி ஏஜண்டு.

[Wanduramba, Galle District.]

1876 ம் ௵-த்து 3 இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வந்துறம்ப பள்ளிக்கூடத்தை விசாலமாக்க என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 8,887. குறிச்சி—வந்துறம்ப.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம் ஏ. ரூ. பே. |
|---|---|---|---|---|
| T 606 | கக்குணகாவாவத்தை | பள்ளிக்கூடமிருக்குந்தோட்டம் | தம்பறகமகே கோமிஸ் இன்னும்பிலர் | 0 1 38 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் எற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ௵ எப்றல்ய 30 ந் தேதியிலன்று 9 மணிக்கு பத்தெகாமத்தில் என்முன்பாக வெளிப்படுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1910 ம் ௵ எப்றல்ய 12 ந் உ.

டபிள்யு. ஈ. தோர்ப்,
அரசாட்சி ஏஜண்டு.

## LAND RESUMPTION NOTICE.

### அரசாட்சியார் திரும்பச் சுதந்தரமாக்கிக்கொள்ளும் காணி விளம்பரம்.

[Galduwa, Galle District.]

தென் மாகாணத்தில் காலி டிஸ்திரிக்கைச்சேர்ந்த வெல்லபொடபற்றிலுள்ள கல்துவ என்னும் கிராமத்திலுள்ளதும் 293 ம் தொம்பர் பிரதமபடத்திலுள்ள 2,236 ம் கண்டமும் 67,030 ம் இலக்கப்படத்தில் விபரிக்கப்பட்டிருக்கிறதும், வடக்கே-தேருட்டுப், விக்கிரமரெட்ண குணவர்தன அதிரின் டி. சில்வா வின் உருத்தாளருக்குடைய J 20 ம் M 20 ம கண்டங்களும, 64,643 ம் தொம்பர் படத்திற் குறிக்கப்பட்ட காணியும் ; மேற்கு-அரசாட்சியாரின் பயிர்ச்செய்கைக்குரிய தோட்டமும், 2,240½ ம் 2,240 ம் J 20 ம் கண்டங்களும் ; தெற்கு-2,238 ம் கண்டமும், விக்கிரமரெட்ண குணவர்தன அதிரின் டி. சில்வாவின் உருத்தாளரின் தோட்டமும், 2,239½ ம் கண்டமும் ; கிழக்கு-மாசசச்சி கோர்னெலிஸ்வுக்கும் மற்றவருக்குமுடைய P 20 ம் கண்டமும், மெண்டண்டிவாவுக்கும் மற்றவர்களுக்குமுடைய Q 20 ம் கண்டமும், விக்கிரமரெட்ண குணவர்தன அதிரின் டி. சில்வாவின் உருத்தாளருக்குடைய N 20 ம் கண்டமும் எல்லைகளாயுள்ளதும் 28 ஏக்கர் 1 றூட்டு விசாலமுமுள்ள காணியை மேசவற்ணமேந்து பிறகீல்லைக்கி 1867 ம் ஆண்டில் கோணண்டவடு ஒதிரின டி. சில்வா விலைக்குவாங்கியிருந்தும் குறித்த நிலத்தின் சொந்தக்காரர் எட்டு வருடங்களுக்கு மேலாய் ஆட்சிபண்ணுமல்விட்டு இருக்கிறதென்று நமக்குத்தெரியவந்து அதற்காக குறித்த காணியின் சொந்தக்காரர் அல்லது நியாயமாய் உருத்துப்பேசுபவர் இவரென்று அறிய கூடியளவு முயற்சியான விசாரணை நான் பண்ணியும் அறிந்துகொள்ளவில்லை.

இத்தாற் சகலருமறிவது யாதெனில் தென் மாகாணத்து அக்றிங் கொவற்ணமேந்து ஏசன்றர் உவில்லியம் எட்வேட் தோர்ப் ஆகிய எனக்கு 1887 ம் ஆண்டின 4 ம் கட்டளைச்சட்டத்தின்பேரால் தந்திருக்கும் தத்துவத்தைக்கொண்டும் தேசாதிபதியவர்களினது அனுமதியுடனும் 1911 ம் ௵ வைகாசிய 31 ந் தேதியிலன்று அல்லது அதற்கு முதலாவது குறிக்கப்பட்ட காணிக்கு தமக்கு உருத்து உள்ளதென்று பூரணப்படுத்தக்கூடியவர் எவராவது உருத்துப்பேசாவிடில், சொல்லப்பட்ட நிலத்தை திரும்பவும் கொவற்ணமேந்துக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்று இத்தால் அறிவிக்கிறேன்.

1910 ம் ௵ மாசிய 25 ந் தேதியின் 6,356 ம் தொம்பர் "கஜற்" பத்திரிகையில் பிரசித்தம்பண்ணப்பட்ட அறிவித்தல் இத்தால் அழிக்கப்படுகிறது.

என்னுடைய கையொப்பமிட்டது 1910 ம் ௵ பங்குனிய 31 ந் தேதி.

டபிள் யூ. ஈ. தோர்ப்,
தென் மாகாணத்தின் அக்றிங் கொவற்ணமேந்து ஏசன்று.

[Tenders for the supply of Milk to the Haputale Hospital.]

அப்புத்தளை ஆசுப்பத்திரிக்கு ஒரு வருஷம் அதாவது 1910 ம் ஆண்டு ஆடிய 1 ந் தேதி துவக்கம் 1911 ம் ஆண்டு ஆனிய 30 ந் தேதி வரைக்கும் தேவையான பால் கொந்திறுத்து ஒப்பந்தம்செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திறுத்து ஒப்பந்தக்கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு "கொந்திறுத்து ஒப்பந்த விசாரணைச் சபைத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும், அல்லது தபால் மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "அப்புத்தளை ஆசுப்பத்திரிக்குப் பால் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1910 ம் ஆண்டு சித்திரைமீ 26 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திறாத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்பவேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக்கேள்வி பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச்செய்ய தவறினால், கேள்வி சரியினமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் ஒவ்வொருவரும் முற்பணம் ரூபா 50 கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல்வேண்டும். கொந்திறாத்துக் கேள்விகள் எழுதி யனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திறாத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத்தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். கொந்திறாத்து ஒப்பந்தந் தீர்த்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக்கொந்திறாத்து கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திறாத்து ஒப்பந்தக்காரன் ரூபா 100 பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச் சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேணடும். கேள்விப்பத்திரத்தின்போரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையிற் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும்.

8. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

9. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ன்மேந்தாருக்குண்டு.

10. இன்னும் தேவையான விவரங்களைப் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளவும்.

(கையொப்பம்) சீ. தீ. கிறிவ்வின்,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு. 1910 ம் ஆண்டு எப்றல் (சித்திரை)மீ 4 ந் தேதி.

---

[Tenders for the transport of Stores from Kurunegala, Civil Medical Department.]

குருநாக்கலிலிருந்து ஒரு வருஷம் அதாவது 1910 ம் ஆண்டு ஆடிமீ 1 ந் தேதி துவக்கம் 1911 ம் ஆண்டு ஆனிமீ 30 ந் தேதி வரைக்கும சாமான்கள் ஏற்றுமதிசெய்வதற்கு ஒப்பந்தஞ்செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திறாத்து ஒப்பந்தக்கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே கடாசுறையில் வைத்து முத்திரையிட்டு "கொந்திறாத்து ஒப்பந்த விசாரணைச்சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும், அல்லது தபால் மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "குருநாக்கலிலிருந்து சாமான்கள் ஏற்றுமதிசெய்வதற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1910 ம் ஆண்டு சித்திரைமீ 26 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திறாத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்பவேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனுங் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக்கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச்செய்ய தவறினால், கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் ஒவ்வொருவரும் முற்பணம் ரூபா 50 கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல்வேண்டும். கொந்திறாத்துக் கேள்விகள் எழுதி யனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திறாத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். கொந்திறாத்து ஒப்பந்தந் தீர்த்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல் ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திறாத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திறாத்து ஒப்பந்தக்காரன் ரூபா 100 பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச் சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்போரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும்.

8. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

9. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ன்மேந்தாருக்குண்டு.

10. இன்னும் தேவையான விவரங்களைப் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) சீ. தீ. கறிவ்வின்,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1910 ம் ஆண்டு சித்திரைமீ 4 ந் தேதி.

---

[Tender for supplying Carts to the Civil Medical Stores, Colombo.]

கொழும்பு சிவில் மெடிக்கல் ஸ்டோருக்கு ஒரு வருஷம் அதாவது 1910 ம் ஆண்டு ஆடிமீ 1 ந் தேதி துவக்கம் 1911 ம் ஆண்டு ஆனிமீ 30 ந் தேதி வரைக்கும் சாமான்கள் ஏற்றுமதிசெய்வதற்கு தேவையான வண்டிகள் விட்டு ஒப்பந்தஞ் செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திறாத்து ஒப்பந்தக்கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே கடாசுறையில் வைத்து முத்திரையிட்டு "கொந்திறாத்து ஒப்பந்த விசாரணைச்சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும், அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "சிவில் மெடிக்கல் ஸ்ரோருக்கு வண்டிவிடுவதற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1910 ம் ஆு வைகாசிமீ 10 ந் தேதி மத்தியானத்திக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திறாத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக்கேள்விகள் எழுதி அனுப்பவேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக்கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தகேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச்செய்ய தவறினல், கேள்வி அசிங்கமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் ஒவ்வொருவரும் முற்பணம் ரூபா 50 கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திறாத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திறாத்தைக் கையேற்க அல்லது அக்கபிணை கொடுக்கத்தவறினல், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். கொந்திறாத்து ஒப்பந்தந் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஏற்றுக்கொள்ளப்படாத மற்றக் கொந்திறாத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திறாத்து ஒப்பந்தக்காரன் ரூபா 100 பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச் சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டியதொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும்.

8. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

9. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ண்மேந்தாருக்குண்டு.

10. இன்னும் தேவையான விவரங்களைப் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) ஜீ. தீ. கிறிவ்வின்,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1910 ம் ஆு சித்திரைமீ 16 ந் உ.

---

[Tender for transporting Salt into Jaffna Karaiyur Salt Stores.]

உப்பு ஏற்றுவதற்கு கேள்விப்பத்திரம்.

இத்தால் சகலருமறியவும் இவ்வாண்டு சிவியாதெரு உப்பளத்திற்சேர்க்கும் உப்பை சிவியாதெருவிலிருந்து யாழ்ப்பாணம் கரையூர் உப்புமாளுக்கு வண்டியில் ஏற்றிக்கொண்டுபோய் கொடுக்க விரும்புவர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்பலாம்.

2. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் இணைப்பிரதிகளாக ஒட்டி முத்திரைவைத்து மேல்விலாசமிட்டிருக்கவேணும்.

(a) மூலப்பிரதியில் வட மாகாணம் கவுண்மேந்து ஏசன்றுவுக்கு என்று மேல்விலாசம் எழுதுக.

(b) இணைப்பிரதியில் கொழும்பு அரசிறைவருமான காரியஸ்தருக்கு என்று மேல்விலாசம் எழுதுக.

3. சிவியாதெரு உப்பு இறக்க கேட்கும் கேள்விப்பத்திரமென்று உறையில் இடதுபக்க மேல்மூலையில் எழுதவேண்டும். 1910 ம் ஆு சித்திரைமீ 30 ந் தேதி மத்தியானத்துக்குமுன் கவண்மேந்து ஏசன்றர் கந்தோரிலும், அரசிறைவருமான காரியஸ்தர் கந்தோரிலும் சேரவேண்டியது.

4. கேள்விப்பத்திரம் அதற்கென்று அச்சடிக்கப்பட்ட கடுதாசியில் எழுதவேணும், அக்கடுதாசிகள் யாழ்ப்பாணம் கச்சேரியில் கேட்டுப்பெற்றுக்கொள்ளலாம். அப்படியான கடுதாசியில் எழுதாத கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படமாட்டா.

5. கேள்விப்பத்திரக் கடுதாசிகள் பெறவிரும்புவோர் கச்சேரியில் ரூபா 50 கட்டி பற்றுச்சீட்டைக் கொடுத்தும் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று கவுண்மேந்து ஏசண்டினால் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஒருவரால் அறிவிக்கப்பட்டு பத்து நாளைக்குள்ளாக பொறுப்பிணை கொடுக்கத் தவறினல், அல்லது ஒப்பந்தத்தை நிறைவேற்ற மறுத்தால், கட்டப்பட்டகாசு பறிமுதலாக்கப்படும்.

6. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தோடு இரண்டு தகுதியான மனுஷர் பிணை நிற்போமென்று சம்மதம் காட்டும் பத்திரம் அனைத்திருக்க வேண்டும், அவர்களுடைய விலாசமும் காட்டியிருக்க வேணும்.

7. ஒவ்வொரு ஒப்பந்தக்காரனும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக போதிய பிணைகாரர் பிணையுறுதிக்குச் சேரவேணும். மற்றும் காரியங்கள் யாழ்ப்பாணக் கச்சேரியில் அறிந்துகொள்ளலாம்.

8. மேற்சொல்லியவைக் கேற்க எழுதப்படாத கேள்விப்பத்திரங்கள் கவனிக்கப்படமாட்டா.

9. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் அல்லது எல்லாவற்றையும் ஏற்க அல்லது நியாயம் சொல்லாது மறுக்க முழு உரித்தும் கவுண்மேந்தருக்கு உண்டு.

எ. தீ. இயுக்ஸ்
யாட்பாணக் கச்சேரி, ஏசண்டருக்காக.
1910 ம் ஆு சித்திரைமீ 7 ந் தேதி.

---

## UNOFFICIAL ANNOUNCEMENTS.

தொழிலுக்குட்படாதவர்களின் அறிவித்தல்.

[Election of Unofficial Member, Local Board, Matale.]

இத்தால் அறிவிக்கிறது 1898 ம் ஆண்டு 13 [illegible] சட்டத்தின்படி மாத்தளைப்பட்டண [illegible] சேர்ந்திருந்த சங்கத்துக்கு உத்தியோகம் [illegible] நீங்கிய மெஸ் சி. அரியநாயகம் அவர்களுக்கு [illegible] லாக இன்னுமொருவரை 1910 ம் 1911 ம் [illegible] களுக்காகத் தெரிந்துகொள்ளும்படி 1910 ம் ஆண்டு வைகாசிமாதம் 6 ந் தேதி சாயந்தரம் [illegible] மணிக்கு மாத்தளை பஸேன் மெமோரியல் ஹோல் என்னும் இடத்தில் ஒரு கூட்டம் கூட்டப்படும்.

ஜே. பீ. லூயிஸ்,
கண்டி கச்சேரி, அரசாட்சி [illegible].
1910 ம் ஆண்டு சித்திரைமீ 12 ந் தேதி.